பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

26 03 2025 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளுக்கு பங்களித்துவரும் அனைவருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.
2. கூட்டுறவு பல்கலைக்கழகத்தை குஜராத் மாநிலம் ஆனந்தில் ஏற்படுத்த வகை செய்யும் மசோதா மக்களவையில் நிறைவேறியது.
3. உள்நாட்டு நிறுவனங்களிடமிருந்து ஆறாயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் துப்பாக்கிகள் மற்றும் வாகனங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தங்களில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.
4. தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் 72 புதிய காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
5. உலகக்கோப்பை **Sepak Takraw** சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஐந்து வெண்கலப்பதக்கங்களை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<>>>>>>

காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளுக்கு பங்களித்துவரும் அனைவருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் இயக்கத்திற்கு பெருகிவரும் ஆதரவு பற்றி குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா விடுத்துள்ள சமூக வலைதள பதிவையும் பிரதமர் பகிர்ந்துள்ளார்.

<<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தின் கண்ணியத்தை காக்கும் வகையில் உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

இன்று மக்களவையில் அவை நெறிமுறைகளுக்கு உட்பட்டே உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் என்று கூறினார்.

<<<<<<>>>>>>

கூட்டுறவு பல்கலைக்கழகத்தை எற்படுத்துவதற்கு வகை செய்யும் மசோதா மக்களவையில் நிறைவேறியது.

முன்னதாக, இந்த மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா, கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியான **Tribhuvandas Kishibhai Patel** பெயரில் இந்த பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

குஜராத் மாநிலம் ஆனந்தில் இந்த பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

நிலக்கரி உற்பத்தி மற்றும் விநியோகத்தில் வெளிப்படைத்தன்மை கடைபிடிக்கப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு இதில் முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார்.

நிலக்கரி சுரங்கங்களினால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக திரு கிஷன் ரெட்டி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் 812 மகளிர் சேவை மையங்கள் செயல்பட்டு வருவதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை இணையமைச்சர் திருமதி சாவித்ரி தாகூர் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், மகளிருக்கு தேவையான அனைத்து ஆலோசனைகளையும், உதவிகளையும் இந்த மையங்கள் வழங்கும் என்றார்.

இந்த மையங்கள் மூலம் இதுவரை பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சட்ட மற்றும் மருத்துவ உதவி, தற்காலிக தங்குமிடம், காவல்துறை உதவி, உளவியல் தொடர்பான ஆலோசனை போன்றவை இந்த மையங்கள் மூலம் வழங்கப்படுவதாக திருமதி சாவித்ரி தாகூர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில், ஆறாயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் துப்பாக்கிகள் மற்றும் வாகனங்களை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தங்களில் பாதுகாப்புத்துறை கையெழுத்திட்டுள்ளது.

ராணுவத்தின் செயல்பாடுகளுக்கு வலுசேர்க்கும் வகையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருப்பதாக பாதுகாப்புத்துறையின் யெ்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் மட்டும் இதுவரை ஒரு லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கொள்முதல் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சத்தீஸ்கரில் கடந்த ஒன்றரை மாதத்தில் மட்டும் 325-க்கும் மேற்பட்ட நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு விஷ்  ணு தியோ சாய் கூறியுள்ளார்.

இன்று பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நக்சலைட்டுகள் சரணடைந்துள்ளதாக தெரிவித்தார்.

சத்தீஸ்கரில் நக்சலைட் பிரச்சினைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் திரு விஷ்ணு தியோ சாய் கூறினார்.

<<<<<<>>>>>>

அரசின் திட்டங்களை பயனாளிகளுக்கு விரைவாக கொண்டு செல்வதில் தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக ஜார்கண்ட் முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் கூறியுள்ளார்.

இன்று ராஞ்சியில் அங்கன்வாடி பணியாளர்களுக்கு நவீன கைபேசிகளை வழங்கி அவர் பேசினார்.

அங்கன்வாடி பணியாளர்களின் தினசரி செயல்பாடுகளை பதிவேற்றம் செய்வதற்கு இந்த கைபேசிகள் உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், அரசு திட்டங்களின் செயலாக்கம் முழுமையாக கண்காணிக்கப்படும் என்றும் திரு ஹேமந்த் சோரன் கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் 72 புதிய காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சட்டப்பேரவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 23 புதிய தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

காவல்துறை கட்டமைப்பை வலுப்படுத்துவதில் தமிழக அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சிக்கிம் அரசின் வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு பிரேம்சிங் தமாங் கூறியுள்ளார்.

கேங்டாக்கில் உள்ள அம்மாநில சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து அவர் பேசினார்.

இந்த நிதிநிலை அறிக்கையில் இளையோர் மற்றும் விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளின் வளர்ச்சியிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக திரு பிரேம்சிங் தமாங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தெலங்கானாவில் இணையதள சூதாட்டத்தை தடுப்பதற்கென சிறப்பு புலனாய்வுக்குழு ஏற்படுத்தப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.

இன்று சட்டப்பேரவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இணையதள சூதாட்ட கைபேசி செயலிகளை கண்காணிப்பதோடு, அவற்றின் மீது உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்றார்.

**<<<<<<>>>>>>**

கர்நாடக சட்டப்பேரவை உறுப்பினர் திரு **Basangouda Patil Yatnal** ஆறாண்டுகளுக்கு கட்சியிலிருந்து நீக்கப்படுவதாக பிஜேபி அறிவித்துள்ளது.

கட்சி விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுவதாக கூறி, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிஜேபி-யின் மத்திய ஒழுங்குக்குழு இந்த முடிவினை அறிவித்தது.

**<<<<<<>>>>>>**

இலங்கையில் ராமாயணா மாநாடு இன்று நடைபெற்றது.

கொழும்பில் உள்ள சுவாமி விவேகானந்தர் கலாச்சார மையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், **Bikaner** பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசியர் **Manoj Dixit** மற்றும் குஜராத் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நீர்ஜா குப்தா ஆகியோர் உரையாற்றினர்.

இந்தியா மற்றும் இலங்கையை சேர்ந்த மதத்தலைவர்கள் பலர் இதில் பங்கேற்றனர்.

சர்வதேச ராமாயணா மற்றும் வேத ஆராய்ச்சி மையம் இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>>**

தாய்லாந்து பிரதமர் திருமதி **Paetongtarn Shinawatra** எதிராக அந்நாட்டு நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வியடைந்தது.

தீர்மானத்திற்கு ஆதரவாக 102 பேரும், எதிராக 319 பேரும் வாக்களித்தனர்.

ஏழு பேர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

**<<<<<<>>>>>>**

பிரேசிலும், ஜப்பானும் பரஸ்பரம் இருதரப்பு வர்த்தகத்தை வலுப்படுத்துவதென முடிவு செய்துள்ளன.

டோக்கியோவில் பிரேசில் அதிபர் திரு **Luiz Da Silva,** ஜப்பான் பிரதமர் திரு **Shiguru Ishiba**–வுடன் நடத்திய பேச்சுக்களின்போது இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் சுற்றுச்சூழல் துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஐந்தாண்டுகால திட்டத்தில் இருதலைவர்களும் கையெழுத்திட முடிவு செய்துள்ளனர்.

**<<<<<<>>>>>>**

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் 'செய்திச்சுடர்' நிகழ்ச்சியில், **"**கோடை காலத்தில் ஏற்படும் உடல்நல பாதிப்புகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து பொதுநல மருத்துவர் டாக்டர் **Spoorthy Arun-**னுடன்**,** எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை **Sepak Takraw** சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஐந்து வெண்கலப்பதக்கங்களை வென்றது.
பீகாரில் நடைபெற்ற இப்போட்டியில், பதக்கங்களை வென்ற இந்திய அணிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.
சமூக வலைதளத்தில், ஆடவர் **Regu** அணி தங்கப்பதக்கம் வென்றது வரலாற்று சாதனையாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
இப்போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வெல்வது இதுவே முதல் முறை என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

----------------

ஆசியக்கோப்பை மூவர் தகுதிச்சுற்று கூடைப்பந்து போட்டியில் இந்தியா - தென்கொரியாவை வென்றது.
சிங்கப்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இந்தியா 21-11 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றிபெற்றது.

------------

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணியின் முதலாவது குழு இன்று அர்ஜென்டினா புறப்பட்டு சென்றது.
35 பேர் கொண்ட இந்திய அணி இதில் பங்கேற்கிறது.
இந்த அணியில் இடம்பெற்றுள்ள 22 பேர் கொண்ட முதல் குழு இன்று புறப்பட்டு சென்றது.
இப்போட்டி **Buenos Aires** –ல் அடுத்த மாதம் 3-ஆம் தேதி தொடங்குகிறது.

-------------

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Nitesh** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 97 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், கஜகஸ்தானின் **Ilyas Guchigov** –வை வென்றார்.

-------------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Akanksha Nitture** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<END>>>>>>**